# சொல்லியல் நோக்கில் தொல்காப்பியச் செய்யுளியல்

இரா. சம்பத்
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி . 605 010.

## இலக்கியத்தின் அடிப்படை சொல்

இலக்கியத்தின் மூலப்பொருள் மொழியாகும். இம்மொழி எழுத்து, சொல், தொடர் என பல கூறுகளைக் கொண்டது. இக்கூறுகளைத் தொல்காப்பியம் எழுத்தியலியலும், சொல்லியலியலும் விளக்குகின்றது. தொல்காப்பியப் பாயிரமும் வழக்கும் செய்யுளும் ஒப்ப நாடி என்று குறிப்பிடுகின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டிலும் தொல்காப்பியர் சில கொள்கைகளைச் செய்யுளுக்குரியதாகச் சுட்டிக்காட்டுகின்றார். எனவே, செய்யுள்மொழி, வழக்குமொழியினின்று வேறுபட்டதைத் தொல்காப்பியர் உணர்ந்திருக்கின்றார் என்பது புலனாகின்றது. மொழியின் ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை ஆகிய மூன்று நிலையிலுள்ள உறுப்புக்களுக்கும் தொல்காப்பியத்தில் இடம்கொடுக்கப்பட்டுள்ளது. இங்குச் சொல்நிலை, தொடர்நிலை தொடர்பான மரபு, எச்சம், முன்னம் ஆகிய உறுப்புக்கள் ஆராயப்படுகின்றன.

## சொல்நிலை

கருத்துக்களை உருவாக்குவதற்கு இன்றியமையாதவை சொற்கள். எனவே, சொல்லாட்சியை மரபு என்ற அடுத்த உறுப்பாக அமைத்து, அச்சொல்லாட்சி அது இடம்பெறும் இலக்கிய வகைக்கு ஏற்ப அமையும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று

என்று நூற்பாவின் வழிப் புலப்படுத்துகின்றார்.

## தொல்காப்பியரின் கவிதை சொல்லின் கோட்பாடு

1. மரபு என்ற உறுப்பு.
2. யாப்பு என்ற முன்னைய உறுப்போடு தொடர்புபடுத்துதல்
3. நான்கு சொல்லாக அமையும் அதன் வகைப்பாடு

## மரபு

மரபு என்பதனைத் தொல்காப்பியர் சொல்மரபு என்றே கொள்கிறார். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு சொல்லின் இயற்கை யாப்பின்வழிப்

பொருந்துதல் மரபு. செய்யுளில் சந்த இயல்புக்கு ஏற்ப ஆளுமிடங்களிலும், உலக வழக்கிற்கேற்பவே தொடர்களை ஆளுதல் வேண்டும் என்று கூறப்படுகிறது. சமுதாய மரபு, செய்யுள் மரபு இரண்டும் மரபு எனப்பட்டன.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
(தொல். பொருள். செய். 590)

என்னும் கருத்தினை அடியொற்றியே சங்க இலக்கியம் அவ்வத்திணைக்குரிய கருப்பொருட்களைச் சொல்லியிருக்கின்றது.

## சொற்களின் வருகை

இயற்சொல், திரிச்சொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கும் செய்யுள் இயற்றுவதற்குரிய சொற்களாகும். இதனைத் தொல்காப்பியர்,

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (சொல். எச்ச. 881)

என்ற நூற்பா மூலம் குறிப்பிடுகிறார். செய்யுளில் ஆளப்பெறும் சொல்லும் பொருளும் அந்தந்தக் காலத்தால் வழங்கும் வகையினால் அமைய வேண்டும். ஒரு காலத்தில் வழங்கப்பட்ட சொல் மற்றொரு காலத்தில் பொருள் மாற்றம் பெறலாம். அவ்வாறே மக்கள் பயன்படுத்திய அணிகள், உடைகள், உணவுப்பொருட்கள் ஆகியன காலந்தோறும் மாற்றம் அடைதலுண்டு. ஓரிடத்தில் வழங்கும் பொருள் மற்றோரிடத்தில் வழங்குவதில்லை. இவற்றைக் கருத்திற்கொண்டு பொருத்தமும் இயைபும் தோன்றப் பாடுதல் வேண்டும் என்பார் பேராசிரியர்.

## சொற்கள் பொருள் கொள்ளும் முறை

தொல்காப்பியர் சொல்லியலில் சொற்களின் வகைப்பாட்டினைக் கூறிய பின்பு, அச்சொற்களின் பொருள்கொள்ளும் முறையினையும் குறிப்பிடுகின்றார். நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்று செய்யுளில் சொற்கள் பொருள்கொள்ளும் முறை நான்கு வகைப்படும் என்பதைத் தொல்காப்பியர்,

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே
(தொல். சொல். 888)

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுகின்றார். இதே கருத்தினைத் தொல்காப்பியர் செய்யுளியலில் யாப்பின் உறுப்புக்களில் ஒன்றாகக் கூறினார். அவ்வுறுப்பு மாட்டு என்பதாகும். செய்யுளில் அகன்றும் அணுகியும் அமைந்து கிடக்கும் பொருள்களை ஒருங்கிணைத்து ஒரு தொடர்பு

வாக்கியமாகக் கொண்டு பொருள் முடித்துக் காட்டும் முறையினைப் பாட்டியல்பு உணர்ந்தோர் மாட்டென்று கூறுவர் (தொல். பொருள். இளம். நூ.490). அகன்று கிடந்த சொற்களை அணுகிய நிலையிற் கொண்டு வந்து இயைத்தலின் மாட்டுதல் என்பது கொண்டுவந்து கொளுத்துதல் என்பர் பேராசிரியர். இதனைக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் அல்லது மொழிமாற்றுப் பொருள்கோள் என்று கருதாது, புலவர் வேறு செய்வதோர் செய்கையாகக் கொள்ள வேண்டும். இது நீண்ட பாட்டாக வரும் தனிநிலைச் செய்யுளாகிய காப்பியத்திலும் வரும் என்பர் நச்சினார்க்கினியர். உரையாசிரியர்களின் கருத்தினை நோக்கும்பொழுது மாட்டு என்பது நீண்ட பாட்டாக வரும் தனிநிலைச் செய்யுளிலும் தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பியத்திலும் வரும் என்று அறியலாம். சிறிய செய்யுளில் சொற்களை இயைத்துப் பொருள் கொள்ளுமாறு இருப்பின், அதனை மாட்டு என்று கூறாது மொழிமாற்றுப் பொருள்கோள் என்று கொள்ளுதல் வேணடும் என்பார் சோ.ந. கந்தசாமி (1989 : 263).

**எச்சம்**

தொல்காப்பியர் எச்சம் குறித்துச் சொல்லதிகாரத்தில் எச்சவியலில் விரிவாகக் கூறியுள்ளார். எச்சச் சொற்களின் வகைப்பாட்டினை,

> பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
> எதிர்மறை உம்மை எனவே சொல்லே
> குறிப்பே இசையே ஆயீரஐந்தும்
> நெறிப்படத் தோன்றும் எஞ்சுப்பொருட் கிளவி. (தொல்.எச். 430).

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுவார். தொல்காப்பியர் குறிப்பிட்ட பத்துவகை எச்சங்களுள் சொல்லெச்சம், குறிப்பெச்சம் ஆகிய இரண்டினையும் செய்யுளியலில் மீண்டும் எடுத்துக் கூறுகிறார். தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களில் ஒன்றாக எச்சத்தினைக் குறிப்பிடுகிறார். படைப்பாளர் எல்லாவற்றையும் அப்படியே பாட்டில் கொட்டிவிடாது படிப்போர்கள் சிந்தனைக்கும் வேலை கொடுக்கும் வகையில் சிலவற்றை எச்சமாக விட்டுவிடுதல் வேண்டும். பிறிதொரு சொல்லோடும், பிறிதொரு குறிப்பொடும் முடிவு கொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சம் என்ற உறுப்பை உடையதாகும் என்கிறார் தொல்காப்பியர். இதனை,

> சொல்லோடும் குறிப்பொடும் முடிவுகொள்
> இயற்கை புல்லிய கிளவி எச்சமாகும்.

என்ற நூற்பா மூலம் விளக்குவார். சங்க காலப் புலவர்கள் இயற்றும் திணைப்பாடல்களில் சொல்லெச்சமும், குறிப்பெச்சமும் பயின்று வரும். பிறிதொரு சொல்கொண்டு பொருள் முடிவு பெறுதலைச் சொல்லெச்சம் என்றும், பிறிதொரு குறிப்பினைக் கொண்டு பொருள் முற்றுப்

பெறுதலைக் குறிப்பெச்சம் என்றும் எண்ணினர் (தொல்காப்பியர், பொருளதிகாரம். 507. இளம்பூரணர் உரை).

## சங்கக் கவிதையில் எச்சம்

கூற்றினாலும் குறிப்பினாலும் எஞ்சிநின்று பிறகு முடிக்கப்படுதல் கூற்றெச்சம். குறிப்பெச்சமாகக் கூறப்படுகின்றன. சங்க இலக்கியத்தின் உள்ளுறையும் இறைச்சியும் இங்ஙனம் அமைந்தவை. புதுக்கவிதையின் அணிநலனாகிய குறியீடு, இத்தகு எச்சப்பண்பு கொண்டதாக அமைகிறது. திணை இலக்கியக் காலமாகிய சங்க காலத்தைக் குறியீட்டுக் காலம் என்றே கூறலாம். இயற்கைப் பொருட்களை மக்கள் வாழ்க்கையோடு இணைத்துக் காட்டும் குறியீட்டுப் பார்வை சங்ககாலக் கவிஞர்களிடம் இருந்துள்ளது. இயற்கைப் பொருள்கள் பின்னணிக் காட்சியாக மட்டும் அமையாமல் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பால் உணர்த்தும் குறியீடுகளாகவே அகப்பாடல்களில் இடம்பெற்றன. அகம், புறம் ஆகிய இரண்டிற்கும் மலர்களையே பழந்தமிழர்கள், குறியீடுகளாகப் பயன்படுத்தினார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களும் மலர்களாலேயே பெயர்பெற்றன. மலர்கள் முதலில் நிலத்திற்கும் பிறகு உரிப்பொருளுக்கும் பின்னர் அந்தந்தத் திணைக்குமுரிய பாடலுக்கும் குறியீடாக நிற்பதை உணரலாம். புறத்திணையில் பலவகையான போர்முறைகளுக்கும் வெற்றிக்கும் மலர்கள் குறியீடாகக் கொள்ளப்பட்டன.

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே (குறுந். 1)

எனும் இப்பாடலை எச்சவகைப் பண்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## முன்னம்

சொல்லால் அன்றிச் சொல்லுவான் குறிப்பால் இப்பொருள் இத்தன்மைத்து என்று பொருள் உணரப்படும் சொற்களும் உள்ளதாகத் தொல்காப்பியர் சொல்லியலில் குறிப்பிடுவார். இதனை,

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன வென்னும் சொல்முறையான (தொல். சொல். நூ. 943).

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுவார்.

குழைகொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் என்னும் தொடரில் பெருஞ்செல்வர், மேட்டுக்குடியினர் என்னும் பொருள் குறிப்பால் உணர்த்தப்படுகிறது. இதே கருத்தினைத் தொல்காப்பியர் செய்யுளியலில் யாப்பின் உறுப்புக்களுள் ஒன்றாகக் கூறினார். அவ்வுறுப்பு முன்னம் என்பதாகும். செய்யுளைக் கேட்போன் அந்தச் செய்யுளில் உள்ள 'கூறியவர்', 'கேட்பேரை' தானே ஊகித்து அறிதல் முன்னம் ஆகும்.

இவ்விடத்து இம்மொழி இவர்இவர்க்கு உரிய என்று
அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்
(தொல். பொருள். 1463)

என்ற நூற்பாவின் மூலம் முன்னம் உறுப்பினைத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். படிப்போரின் மதிநுட்பம், ஊகத்திற்கு வேலை கொடுக்கம் இக்கூறு கவிதையில் இன்னதென்று புரியாமல் குழப்பத்தைச் சில போழ்தில் ஏற்படுத்தும். இது தோழி கூற்றா, தலைவி கூற்றா, இது எது குறித்த கூற்று என்ற குழப்பம் ஏற்படுத்தும். ஐங்குறுநூற்றின் சில பாடல்கள் இப்பண்பு கொண்டவை. இதுவே புதுக்கவிதையில் இருண்மை (Obscurity) யாகக் காணப்படுகிறது.

தொல்காப்பியர் தன் காலத்தில் பயின்று வழங்கிய மொழிமரபுகள், இலக்கிய மரபுகள் ஆகியவற்றை நுட்பமாகக் கண்டறிந்து தொல்காப்பியத்தில் விளக்க முற்பட்டார். யாப்புக்கு அடிப்படை உறுப்புக்களான மாத்திரை, எழுத்து ஆகிய இரண்டினை எழுத்தியலிலும் மரபு, எச்சம், முன்னம் ஆகிய உறுப்புக்களை சொல்லியியலிலும் எடுத்துக் கூறினார். இவ்வுறுப்புக்களின் இலக்கணங்களை செய்யுளியலின் இசைவுக்கு ஏற்பத் தொல்காப்பியர் மாற்றியமைத்துக் கொண்டார் என்பதனை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.

## மேற்கோள் நூல்கள்


கந்தசாமி. சோ.ந. 1989. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

குறுந்தொகை. 1955. உ.வே.சா. பதிப்பு. சென்னை.

தொல்காப்பியம். 1954. எழுத்ததிகாரம். நச்சினார்க்கினியர் உரை. சென்னை: கழகப் பதிப்பு.

------------------------. 1952. சொல்லதிகாரம். சேனாவரையர் உரை. சென்னை: கழகப் பதிப்பு.

------------------------. 1975. பொருளதிகாரம். பேராசிரியர் உரை. சென்னை: கழகப் பதிப்பு.

வெள்ளைவாரணன். க.ப.,(பதி.). 1970. தொல்காப்பியம். அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.